## ருகூவிலிருந்து எழும்போது ஓதவேண்டிய துஆ

1 سَمِعَ اللّٰهُ لِمَن حَمِدَه

பொருள்: அல்லாஹ் தன்னைப் புகழ்ந்துரைப்பவனைக் கேட்டுக் கொண்டான் (புக்ஹாரி).

2 رَبَّنَا وَلَكَ الحَمد حَمدًا كَثِيرًا طَيِّبًا مبَارَكًا فِيهِ

பொருள்: எங்கள் இரட்சகனே, புகழ் அனைத்து உனக்கே, எல்லையில்லாப் புகழும், தூய்மையும், அது புனிதமும் நிறைவாகக்கொண்டது (புக்ஹாரி).

3 مِلء السَّمَاوَاتِ، وَمِلءِ الْأَرضِ، وَمِلء مَا بَينَهمَا، وَمِلء مَا شِئتَ مِن شَيء
بَعد، أَهلَ الثَّنَاءِ وَالمَجدِ، أَحَق مَا قَالَ العَبد وَ كلنَا لَكَ عَبدٌ، لاَ مَانِعَ لِمَا
أَعطَيت ،وَلاَ معطِيَ لِمَا مَنَعتَ، وَلاَ يَنفَع ذَا الجَدِّ مِنك الجَدّ

பொருள்: வானங்களையும் பூமியையும், அவ்விரண்டிற்குமிடையிலுள்ள இடைவெளியையும், நீ நாடிய அனைத்தினையும் நிரப்பும் அளவிற்கும் மேலானது உன்னுடைய புகழ், புகழுக்கும் மேன்மைக்கும் உயரிவனே, அடியான் கூறுவது மிகவும் உண்மையானது, நாங்கள் அனைவருமே உன்னுடைய அடிமைகளாக இருக்கின்றோம், நீ எதனை அளிக்கின்றாயோ அதனைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் யாருக்கும் இல்லை, நீ யாருக்கு அளிக்கவில்லையோ அவனுக்கு யாராலும் எதையும் அளித்துவிட முடியாது. எவ்வளவுதான் மேன்மைக்குரியவனாக இருந்தாலும் எவனுடைய மேன்மை உன்னுடைய மேன்மைக்கு முன்னால் எவ்விதப் பலனையும் அளிக்காது (முஸ்லிம்).

* * *

www.uzaifalahi.com